**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**

**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.DVC.17/2022**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | சௌந்தர்யா | Prosecution | PW-1 Chief |
| Husband Name | பிரவீன் குமார் | Defence | |
| Village | சீர்காழி, விளந்திடசமுத்திரம் | Taluk | Sirkali |
| Age | 40/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day **02.04.2025.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**<u>முதல் விசாரணை</u>**

நான் இவ்வழக்கின் மனுதாரர் ஆவேன். எனது கணவர் மற்றும் எனது குடும்பதாருக்கு எதிராக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக இன்று தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். படித்து பார்த்து தான் கையெழுத்து செய்துள்ளேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும், எனது தரப்பு சாட்சியத்திற்கு ஆதரவாக , எனது தரப்பில் கீழ் கண்ட சான்றாவனங்களை குறியீடு செய்கிறேன். மனுதாரருக்கும் முதல் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமண பத்திரிகை அசல் **ம.சா.ஆ–1** ஆகவும், எனக்கும் 1 ம் எதிர்மனுதாரருக்கும் பிறந்த முதல் குழந்தையின் பிறப்பு சான்றிதழ் நகல்(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ) **ம.சா.ஆ–2** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனக்கும் 1 ம் எதிர்மனுதாரருக்கும் பிறந்த இரண்டாவது குழந்தையின் பிறப்பு சான்றிதழ் நகல்(அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு ) **ம.சா.ஆ–3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 2 மற்றும் 3 வது மனுதாரர்களின் பள்ளி கட்டண ரசீசுகள் எண்ணிக்கை மொத்தம் 16 அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நகல் **ம.சா.ஆ–4** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 1 வது எதிர்மனுதாரரின் பெயரில் கடந்த 24.08.2020 வருடம் உடுமலைபேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த கிரய ஆவணம் நகல் **ம.சா.ஆ–5** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. 1 வது எதிர்மனுதாரரின் சம்பள பட்டியல் நகல் **ம.சா.ஆ–6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**